074/DM/25

T.C-027

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SPECIAL LANGUAGE TEST FOR OFFICERS OF THE EDUCATION DEPARTMENT HIGHER STANDARD – FIRST PAPER – TAMIL (TEXT AND TEXTUAL GRAMMAR)

(Without Books)

Maximum Time : 2.30 hours | Maximum Marks : 100

### பகுதி – I

**எவையேனும் ஆறு வினாவிற்கு விடை தருக.** **(6 × 4 = 24)**

1. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்

   வடுக்கண் வற்றாகும் கீழ்" — இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.

2. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

3. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

4. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? இதோ … இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.

5. நான்கனுக்கு இலக்கணக் குறிப்பு தருக :

   (அ) காய்மணி

   (ஆ) காக்கென்று

   (இ) நன்மொழி

   (ஈ) கணீர்

6. நான்கினுக்கு வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

   (அ) கீரியும் பாம்பும் போல

   (ஆ) கண்துடைப்பு

   (இ) கிணற்றுத் தவளை போல

   (ஈ) கானல் நீர்

[Turn over

7. நான்கினுக்கு பொருள் தருக :

(அ) மாளாத

(ஆ) துகிர்

(இ) பாசவர்

(ஈ) கொம்பு

8. நான்கினைப் பிரித்து எழுதுக :

(அ) முக்காற்புள்ளி

(ஆ) உயிரெழுத்து

(இ) உரையாடல்

(ஈ) சாயுங்காலம்

## பகுதி – II

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை தருக.** **(6 × 6 = 36)**

1. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

2. பின்வரும் மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

(அ) மனக்கோட்டை

(ஆ) கண்ணும் கருத்தும்

(இ) அள்ளி இறைத்தல்

(ஈ) ஆறப்போடுதல்

3. முள்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப் பொருள்கள் யாவை?

4. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

5. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

6. மன்னன், இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

7. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

## பகுதி – III

**எவையேனும் <u>நான்கு</u> வினாக்களுக்கு விடை தருக.** **(4 × 10 = 40)**

1. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

2. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

3. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துக்களை ஒட்டிச் ‘செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்’ பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

4. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

5. முன்னுரை – உழவுத்தொழில் – உழவர் – உழவுத்தொழிலின் இன்றியமையாமை – உழவர்களை மதித்தல் – உணவினை வீணாக்காமல் உண்ணுதல் – முடிவுரை.

இக்குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதி, பொருத்தமான தலைப்பிடுக.

---